HELSE BERGEN
Haukeland Universitetssykehus

## பெரியோர்களுக்கான நார்வேஜியன் நீரிழிவு நோய் பதிவகத்தில் பதிவு பற்றிய விசாரணை

**பதிவகத்தின் நோக்கம்:**
பெரியோர்களுக்கான நார்வேஜியன் நீரிழிவு நோய் பதிவகமானது ஓர் தேசிய தர பதிவகமாகும். நீரிழிவு நோயாளிகள் சிகிச்சை தரத்தை மேம்படுத்துவதே இதன் முதன்மை நோக்கமாகும். இந்த பதிவகம் நீரிழிவு மற்றும் நீரிழிவு தொடர்பான நோய்கள் பற்றி ஆய்வு அடிப்படையின் ஒரு முக்கிய பகுதியை உருவாக்கும். இந்த பதிவகம் நார்வேஜியேன் தகவல் பாதுகாப்பு அமைப்பால் ஒப்புதல் அளிக்கப்பட்டது. பெரியோர்களுக்கான நார்வேஜியன் நீரிழிவு பதிவகத்தில் பதிவுசெய்தல் முற்றிலும் தன்னார்வமானது மற்றும் இதற்கு எழுத்து வடிவ அறிதளிக்கப்பட்ட ஒப்புதல் தேவைப்படுகின்றது. இதன் பொருள் என்னவென்றால், நீங்கள் இதில் பதிவு செய்வதற்கு முன் ஒப்புதல் அறிக்கையில் கட்டாயம் கையொப்பம் இடவேண்டும் என்பதாகும்.

**உங்களை பற்றிய பின்வரும் விவரங்கள் பதிவகத்தில் இருக்கும்**:

- பொதுவான தகவல்கள்: பெயர், பிறந்த தேதி, முகவரி, பாலினம் மற்றும் சிகிச்சை அளிக்கும் மருத்துவர் பெயர். இந்த தனிப்பட்ட விவரங்கள் சரியானவை என்பதை உறுதி செய்ய தேசிய பதிவகம் பயன்படுத்தப்படும்.
- உடல்நல/சுகாதார தகவல்கள்: நீரிழிவு நோயின் வகை மற்றும் சிகிச்சையளிக்கப்பட்ட வருடம், ஏதேனும் நீரிழிவு சங்கத்தின் உறுப்பினர், வருடாந்தர கட்டுப்பாடு சோதனைகளான கண்பார்வை சோதித்தல் மற்றும்/அல்லது உடல்நோய் மருத்துவர் சோதனைகள், நீரிழிவு பற்றிய பயிற்சி, நீரிழிவு சிக்கல்கள், உயரம் மற்றும் எடை, நீரிழிவு அல்லது இதய நோய்க்கான சோதனைக்கூடம் முடிவுகள் மற்றும் மருந்துகள் பயன்பாடு போன்றவைகளின் நிலை.
- நீரழிவு நோயுடன் சம்பந்தப்பட்ட, பல்வேறு அம்சங்கள் மற்றும் அது சந்திக்கும் சவால்களை பற்றிய தகவல்

மேலும், உங்களிடம் கூடுதல் இரத்த பரிசோதனை மற்றும் சிறுநீர் பரிசோதனை வழங்க கேட்கப்படலாம். உதாரணமாக, நீங்கள் சோதனைக்காக மருத்துவர் இடத்திற்கு வருகை அளிக்கும்போது இவை கேட்கப்படலாம். இந்த பரிசோதனைகள் ஆய்வு பயோ வங்கி என்றழைக்கப்படும் இடத்தில் சேமிக்கப்படும் மற்றும் இதன் முடிவுகள் நீரிழிவு நோய் ஆராய்ச்சிக்காக மட்டுமே பயன்படுத்தப்படும்.

**இந்த தகவல்கள் உங்களுக்கு சிகிச்சை அளிக்கும் மருத்துவரால்** தொடர்ந்து (பெரும்பாலும் ஆண்டு தோறும்) சேகரிக்கப்பட்டு, அவை உங்கள் குறிப்பேட்டில் இருந்து பெரியோர்களுக்கான நார்வேஜியன் நீரிழிவு பதிவகத்திற்கு பரிமாற்றம் செய்யப்படும் அல்லது நேரடியாக தரவுத்தளத்திற்கு தகவல்கள் வழங்கப்படும். ஹெல்ஸ் பெர்கென் சுகாதார அறக்கட்டளை, ஹாக்லாண்ட் பல்கலைக்கழக மருத்துவமனை, இந்த தகவல் செயலாக்கத்திற்கு பொறுப்பேற்று, சொந்தமான தரவுதளத்தையும் பயோ வங்கியையும் கொண்டுள்ளது. தினசரி செயலாக்கம் NOKLUS[1] -ற்கு நியமிக்கப்பட்டுள்ளது. இது பெர்கென்-னில் உள்ள ஹரால்ட்ஸ்பிளாஸ் டையகோனல் மருத்துவமனையுடன் இணைக்கப்பட்டுள்ளது. தகவல் தொழில்நுட்பத்தின் துணையுடன் தகவல் பரிமாற்றங்கள் செய்யப்படுகின்றன. ஏதேனும் தொடர்பற்ற அணுகல்களுக்கு எதிராக இந்த தகவல்கள் பாதுகாப்பாக உள்ளதா என்பதையும் உறுதி செய்கின்றது. பல்வேறு ஆய்வு திட்டம் தொடர்பான அல்லது தரவுத்தளத்தில் உள்ள தகவல்கள் முழுமையாகவும் சரியானதாகவும் உள்ளனவா என்பதை உறுதி செய்வதற்கும், இவைகள் இதர பொதுவான தரவுத்தளங்களில் உள்ள நீரிழிவு தகவல்களை எடுக்கக்கூடும். ஒவ்வொரு முறையும் இதர பதிவேடுகளுடன் தொடர்பு கொண்டு, இது பற்றிய ஒரு செய்தி எங்கள் இணையத்தளத்தில் (www.noklus.no) போடப்படும். தகவல்கள் எடுக்கப்படும் தளவுத்தளங்கள்: குழந்தைகளுக்கான நீரிழிவு பதிவகம், நார்வேஜியன் பரிந்துரைக்கப்பட்ட தரவுத்தளம், கல்லீரல் பதிவகம், இருதய நோய் பதிவகம், மருத்துவ பிறப்புகள் தரவுத்தளம், புற்றுநோய் பதிவகம், இறப்பு காரண தரவுத்தளம், கல்வி தரவுத்தளம், நோயற்ற தரவுத்தளம் மற்றும் நார்வேஜியன் நோயாளி தரவுத்தளம் (மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட எல்லா நோயாளிகளின் தகவல்கள் அல்லது மருத்துவமனைகளில் வல்லுநர்களால் சிகிச்சையளிக்கப்பட்ட தகவல்களும் இதில் இருக்கும்)

**இந்த தகவல்கள் நிரந்தரமாக** மின்னணு வடிவத்தில் சேமிக்கப்படும். இந்த தகவல்களை செயலாக்கப்படுத்த தனிப்பட்ட தகவல் பாதுகாப்பு சட்டம் § 33 -யின் படி, நார்வேஜியன் தகவல் பாதுகாப்பு அமைப்பு ஒப்புதல் அளித்துள்ளது. சேகரிக்கப்பட்ட எல்லா தகவல்களும் பாதுகாக்கப்படும் மற்றும் பொது அறிவை வளர்க்கும் சூழ்நிலைகள் தொடர்பாக இந்த தரவுத்தளத்தின் தகவல்களை பயன்படுத்தும் எல்லா நபர்களும் இதன் பாதுகாப்பு தன்மையை நிலை நிறுத்த வேண்டும்.

**உங்கள் பதிவுகளை அணுகும் உரிமை, தகவல் மாற்றம் மற்றும் நீக்கல்**

[1] NOKLUS -யின் விரிவாக்கம் நார்வேஜியன் முதன்மை சுகாதார பாதுகாப்பு தர முன்னேற்ற ஆய்வகங்கள்.

Besøksadresse: Haukeland Universitetssykehus, Jonas Liesvei 65; Postadresse: Helse Bergen HF, Postboks 1, 5021 Bergen
Telefon 55 97 50 00 – Innvalg – Telefaks, E-mail: postmottak@helse-bergen.no
Foretaksnr. NO 983974724 mva. Internett: www.helse-bergen.no

உங்களைப் பற்றிய தகவல் கொண்ட பதிவகத்தை அணுக உங்களுக்கு முழு உரிமையும் உள்ளது. எந்த நேரத்திலும் எவ்வித காரணமும் கூறாமல், நீங்கள் உங்கள் தகவல்கள் தரவுத்தளத்தில் இருந்து நீக்குவதற்கும் இரத்த மற்றும் சிறுநீர் பரிசோதனைகளை அழிக்கவும் கோரிக்கை விடுக்கலாம். இந்த உரிமை தனிநபர் தகவல் பாதுகாப்பு சட்டத்தின் 18, 27 மற்றும் 29 ஆம் பத்தியிலும் பயோ வங்கி சட்டம் § 14 -லும் குறிப்பிடப்பட்டுள்ளது. உங்கள் மருத்துவர் இதனை அறிவார் மற்றும் நீங்கள் இந்த தரவுத்தளத்தில் இருக்க விரும்பவில்லைஎன்றோ அல்லது விலகி கொள்ள தீர்மானம் செய்வதாக நீங்கள் தேர்வுசெய்திருந்தால், அதன்பின்னர் உங்களுக்கும் உங்கள் மருத்துவருக்கும் எவ்வித தொடர்பும் இருக்காது.

**பதிவகத்திலிருந்து வழங்கப்படும் தகவலானது**, பெயரற்ற பட்டியல்கள் வடிவாக ஆராய்ச்சியாளர்களுக்கு மட்டுமே வழங்கப்படும். இதன் பொருள் என்னவென்றால், உங்களின் அடையாளம் மறைக்கப்பட்டு, உங்கள் பெயர் மற்றும் இதர பண்புகள் பெரியோர்களுக்கான நார்வேஜியன் நீரிழிவு பதிவகத்தில் மட்டுமே சேமிக்கப்படும். பெரியோர்களுக்கான நார்வேஜியன் நீரிழிவு பதிவகத்தை பற்றிய கூடுதல் தகவல்களை பெற: NOKLUS, தொலைபேசி. 55 97 95 00-னை தொடர்புகொள்ளவும்.

## ஒப்புதல் அறிக்கை

நான், பெரியோர்களுக்கான நார்வேஜியன் நீரிழிவு பதிவகம் பற்றிய தகவலை படித்தேன் மற்றும் பெரியோர்களுக்காக நீரிழிவு பதிவகம் உருவாக்கப்பட்டுள்ளது என்பதையும் அறிவேன். பெரியோர்களுக்கான நார்வேஜியன் நீரிழிவு பதிவகம் பெர்கென்-னில் NOKLUS இடத்தில் நடைபெற்றது. ஹெல்ஸ் பெர்கென் HF, ஹாக்லாண்ட் யுனிவேர்சிடேட்சைகெஹஸ் தகவல் மேலாண்மைக்கும் பொறுப்பு வகித்து, இந்த பதிவகத்தின் உரிமையாளர்களும் ஆவார்கள்.

இந்த தகவல் கடிதம் மூலமாக நான் பதிவகத்தின் நோக்கம், எந்தெந்த தனிப்பட்ட தகவல்கள் பதிவு செய்யப்படும் என்பதையும், எங்கிருந்து தகவல்கள் சேகரிக்கப்படும் என்பதையும், எவ்வாறு தகவல்கள் பரிமாற்றம் செய்யப்படும் என்பதையும் மற்றும் தரவுத்தளத்தில் உள்ள தகவல்கள் அணுகல்கள், திருத்தம் செய்வது மற்றும் நீக்கல் குறித்த உரிமைகள் போன்றவற்றையும் தெரிந்துகொண்டேன்.

பதிவு செய்வதற்கு நீரிழிவு படிவத்தை பூர்த்தி செய்யவேண்டும் என்பதையும் நான் அறிவேன் மற்றும் தரவுத்தளத்தின் ஒரு பகுதியை உருவாக்கவும் ஆராய்ச்சி பயோ வங்கியில் சேகரிப்பதற்காக என்னிடம் இரத்தம் மற்றும் சிறுநீர் மாதிரிகள் கேட்கப்படலாம். பயோ வங்கியில் உள்ள மாதிரிகள் நீரிழிவு நோய் பற்றிய ஆராய்ச்சிகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்படும்.

**HELSE BERGEN**
Haukeland Universitetssykehus

**நான் இதன்மூலமாக எனது நிலை குறித்த தகவல் மற்றும் இரத்தம் மற்றும் சிறுநீர் பரிசோதனைகளின் முடிவுகளையும் பெரியோர்களுக்கான நார்வேஜியன் நீரிழிவு பதிவகத்தில் சேர்ப்பதற்காகவும், தரவுத்தள நிர்வாகம் நீரிழிவு தொடர்புடைய ஆராய்ச்சி தொடர்பாக என்னை தொடர்புகொள்ளவும் ஒப்புதல் அளிக்கின்றேன்.**

பெயர்:

------------------------------------------------------------

(பெரிய எழுத்துக்களை பயன்படுத்தவும்)

தேசிய காப்புறுதி எண்: ----------------------------------------
(11 இலக்குகள்)

இடம் : ------------------------------ தேதி : ------------------------------

------------------------------------------------------------
கையொப்பம்

ஒப்புதல் படிவம் உங்கள் மருத்துவரிடம் ஒப்படைக்கப்படும் அல்லது நேரடியாக கீழுள்ள முகவரிக்கு அனுப்பிவைக்கப்படும்:

**நார்வேஜியன் டையபெடிஸ் ரெஜிஸ்ட்ரி பார் அடல்ட்ஸ்**
**Norsk diabetesregister for voksne**
**NOKLUS**
**PB 6165**
**5892 Bergen**

அக்டோபர் 2017-ல் பரிசீலனை செய்யப்பட்டது